# நாகர்கோவில் மாநகராட்சி

# NAGERCOIL CITY MUNICIPAL CORPORATION

## 2025-2026-ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்டம்

## BUDGET ESTIMATE FOR THE YEAR 2025-2026

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்

அடிதழ்இ நிற்கும் உலகு

தமிழர் மறை – (544)

<u>குறள் விளக்கம்</u>

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும்

நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்

.............................................................................................................


நாகர்கோவில் மாநகராட்சி
அலுவலகம்



# நாகர்கோவில் மாநகராட்சி

## 2025-2026 உத்தேச வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

**2024-2025ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவு செலவு திட்டம் மற்றும்**

**2025-2026ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடு குறித்த அறிக்கை**

இந்த நிதியாண்டில் நாகர்கோவில் மாநகராட்சி அனைத்து பகுதி மக்களுக்கும் பரவலாக எல்லா அத்தியாவசிய வசதிகளும் கிடைக்கப்பெற வேண்டும் என்ற எண்ணத்தில் சாலை வசதிகள், தெருவிளக்கு, மழைநீர் வடிகால், குடிநீர் விநியோகம் ஆகியவற்றிற்கு எல்லா வார்டுகளுக்கும் சமமாக முக்கியத்துவம் கொடுத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

இத்தகைய அடிப்படை வசதிகளையும் பொது சுகாதாரம், பூங்காக்கள், சந்தைகள், நகரமைப்பு முதலிய மேம்பாட்டு வசதிகளையும் மாநகராட்சியின் நிதி, மத்திய, மாநில அரசுகளின் மானிய உதவி ஆகியவற்றுடன் இம்மாநகராட்சி மக்களுக்கு அனைத்து வசதிகளையும் தங்கு தடையின்றி செய்ய இயலும் என நம்புகிறோம். இதற்காக இம்மாநகர்மன்றம் அனைத்து தரப்பு மக்களின் ஒத்துழைப்பினையும் பொது சேவை நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் முழுமையாக சரியான நேரத்தில் பயன்படுத்திக் கொள்ள ஆர்வமாக உள்ளது என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒருங்கிணைந்த நிதி நிர்வாகத்தின் மூலம் தேவையற்ற செலவினங்களைக் கட்டுப்படுத்தி வருவாய் இனங்களில் ஏற்படும் இழப்பினைத் தவிர்த்து வருவாயை அதிகரிக்கவும் தக்க நிர்வாக நடவடிக்கை எடுக்கப்படும். அதனால் நிதி நிர்வாகம் கட்டுப்பாட்டுடன் இருக்கவும் அவசியமான மக்கள் நலப்பணிகளை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்படும். நடப்பு ஆண்டில் இதுவரை மேற்கொண்ட வரவு செலவுகளை அடிப்படையாக கொண்டு 2025-2026-ம் ஆண்டிற்கு வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

சொத்துவரி, தொழில்வரி, காலிமனைவரி, புதிய கட்டிடங்களுக்கான சொத்துவரி மூலம் கூடுதலாக கிடைக்கும் வரவு, கடைகள், நிறுவனங்களுக்கு புதியதாக தொழில்வரி விதிப்பதன் மூலம் கிடைக்கும் வரவு, மாநகராட்சி சொத்துக்கள் மூலம் வரும் வருமானங்கள், மாநில நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப்படும் நிதி, கேளிக்கை வரி மற்றும் முத்திரைத்தாள் கட்டணம், 15-வது நிதிக்குழு பரிந்துரைகளின் மீது அளிக்கப்படும் மானியம், சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைகள் படி அளிக்கப்படும் நிதி வழியாக கிடைக்கும் வருமானம் ஆகியவற்றை வரவாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## 1.முறைப்படுத்தப்பட்ட நிதி ஆதாரம்

இயற்றலும் ஈட்டலுங், காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு

குறள் 385

**குறள் விளக்கம்**

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

நாகர்கோவில் மாநகராட்சிகளில் புதியதாக கட்டிடப்பட்டு வரும் கட்டிங்களுக்கு உரிய நேரத்தில் வரிவிதிப்பு செய்து நிதி ஆதரம் மேம்பாடுத்தப்படும். மேலும் மாநகராட்சியின் நிதி ஆதாரத்தினை பெருக்கும் வகையில் உரிய வழிமுறைகள் ஆராயப்பட்டு, பொதுமக்கள் பாதிப்படையாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாநகராட்சியின் நிதி ஆதாரத்தை பெருக்கும் வகையில் எழில்மிகு வணிக வளாகங்களை மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் அமைக்க ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, எழில்மிகு வணிக வளாகம் அமைக்கப்படும்.

## நமக்கு நாமே திட்டம்

நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் 2024-2025 ஆம் ஆண்டில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

மேலும் அரசின் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டுகளில் ரூ.73.95 இலட்சம் ICICI வங்கி (ரூ.22.65 இலட்சம்) மற்றும் கங்கா ஜுவல்லரி (ரூ. 2.00 இலட்சம்) இணைந்து மாநகராட்சி எல்லைக்கு அருகில் உள்ள புத்தேரி குளத்தினை மேம்பாடுகள் செய்ய திட்டமிட்டதில் பொதுப்பணி துறை / நீர்வள ஆதாரத் துறையிடம் இருந்து தடையில்லா சான்று பெறுவதில் காலதாமதம் ஆகிய காரணத்தினால் மேற்படி அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மாநகராட்சிக்குட்பட்ட

பகுதிகளில் 15 எண்ணம் புதிய பயணிகள் நிழற்குடை அமைத்திட உத்தேசிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## சாலைகள் மேம்படுத்துதல்

மாநகர உள் கட்டமைப்பு வளர்ச்சியின் முக்கியப்பங்காக சாலைகள் உள்ளன. நாகர்கோவில் மாநகராட்சியில் தற்சமயம் ஆளூர், தெங்கம்புதூர் பகுதிகளை உள்ளடக்கி 905.490 கி.மீ நீளத்தில் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் தற்சமயம் AMRUT குடிநீர் பணி மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளால், பழுதுற்ற சாலைகளை பல்வேறு அரசு திட்டங்கள் வாயிலாக மேம்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இவையாவும் சாலைப்பதிவேட்டில் சாலை, தெரு, சந்து என வகைப்படுத்தி அதற்கென குறியீட்டு எண். வழங்கி அதன் அடிப்படையில் தேர்வு செய்து முறைபடுத்தப்படுகிறது.

2024–2025 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு நகர்புறசாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ. 8.32 கோடி 15–வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் 3.58 கோடி மொத்தம் 11.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி TURIP திட்டத்தின் கீழ் 297.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## குடிநீர் மேம்பாட்டு திட்டம்

" நீரின்றி அமையாது உலகு "

என்ற குறளுக்கு ஏற்ப நீரின்றி இந்த உலகில் வாழ இயலாது என்பது நாம் அறிந்ததே!

நாகர்கோவில் மாநகராட்சியில் பொதுமக்கள் அனைவருக்கும் குடிநீர் தங்கு தடையின்றி கிடைத்திடும் வகையிலும், ஒவ்வொரு வீட்டிற்கும் பாதுகாப்பான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவது முதன்மையான நோக்கமாக கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அம்ரூத்**

நாகர்கோவில் மாநகராட்சியில் அம்ரூத் திட்டத்தில் ரூ.296.00 கோடி மதிப்பீட்டில், புத்தன் அணையினை குடிநீர் ஆதாரமாக கொண்டு குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் சோதனை ஓட்டம் நடைப்பெற்று வருகிறது.

**அம்ரூத் 2.0**

குடிநீர் திட்டம் மூலமாக மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட ஆளூர் மற்றும் தெங்கம்புதூர் பகுதிகளில் குடிநீர், அம்ரூத் திட்டத்திற்கு இணையாக வழங்கவும், குடிநீர் குழாய் அமைத்து குடிநீர் வசதி ஏற்படுத்திடவும், ரூ.64.68 கோடி மதிப்பீட்டில் திட்ட பிரேரணை அறிக்கை தயார் செய்யப்பட்டு இவ்வாண்டு நிறைவேற்றும் வகையில் 20.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. 31.08.2025-க்குள் முடித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நகரில் அனைத்து பகுதிகளுக்கும் சீரான குடிநீர் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 LPCD என்ற அளவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட குளங்களை மறு சீரமைக்கும் விதமாக ரூ 0.77 கோடி மதிப்பீட்டில் சூர்யா நகர் குளம் மற்றும் பெதஸ்தா குளம் ஆகிய குளங்களை சீரமைக்கப்பட்டு நிலத்தடி நீரை பாதுகாத்து அப்பகுதிகளை அழகுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் புதியதாக இணைக்கப்பட்டுள்ள ஆளூர், தெங்கம்புதூர் பகுதிகளில் தலா ஒரு குளம் மேம்பாடு மற்றும் புதிய பூங்கா என ரூ.1.87 கோடியில் பணிகள் தேர்வு செய்யப்பட்டதில் பூங்கா பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

மேலும் குளங்கள் புனரமைப்பு பணியில் 90% பணிகள் முடிக்கப்பட்டு நடப்பாண்டில் இப்பணிகள் முடிந்து பொதுமக்கள் பயன்பாட்டில் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5. ஒளிரும் தெருவிளக்குகள்

மாநகரில் தெருவிளக்குகள், உயர் மின்கோபுர மின் விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகளை மின் சிக்கன விளக்குகளாக மாற்றம் செய்தும், ஒளிரும் தெருவிளக்குகள் மேம்படுத்தும் வகையில் மொத்த சாலைகளின் நீளத்திற்கு ஏற்ப கூடுதல் தெருவிளக்குகள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் மின் ஆற்றல் சேமிப்பு தலைப்பில் ESCO தனியார் நிறுவனம் மூலமாக செயல்படுத்தும் வகையில் ரூ.14.64 கோடியில் 14759 எண்ணம் தெருவிளக்குக்ளை LED தெருவிளக்குகளாக மாற்றம் செய்திட பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு உள்ளது. இவ்வாண்டு மின் ஆற்றல் சேமிப்பு குறைந்தபட்சம் 50% வரை கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இம்மாநகராட்சியின் தரத்தினை மேம்படுத்தும் வகையில் கூடுதலாக 5300 எண்ணம் புதிய தெருவிளக்குகள் மின் ஆற்றல் சேமிப்பு தலைப்பில் ESCO செயல்படுத்தும் வகையில் நடப்பாண்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

6. பேருந்து நிலையங்கள்

உலக புகழ் வாய்ந்த சுற்றுலா தலமாக திகழும் கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைமையிடமாக நாகர்கோவில் இருப்பதாலும், அண்டை மாநிலமான கேரளா மற்றும் பல்வேறு மாநிலத்தில் இருந்து சுற்றுலா பயணிகள் இங்கு வந்த பிறகே பிற இடங்களுக்கு செல்கின்றனர். அவர்களுக்கு அனைத்து வசதிகளும் பெற வேண்டி ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் அரசின் மூலதன மானிய நிதியின் கீழ் (உட்கட்டமைப்பு)

1) வடசேரி கிறிஸ்டோபர் பேரூந்து நிலையம்.

2) அண்ணா பேரூந்து நிலையம்.

3) ஆம்னி பேரூந்து நிலையங்களை நவீனபடுத்தி மேம்படுத்திடும் பொருட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் (Integrated Bus Terminal) அமைக்க திட்டமிட்டு வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் மற்றும் கனகமூலம் சந்தையினை ஒருங்கிணைத்து புதிய நவீன ஒருங்கிணைந்த பேருந்து நிலையமாக மாற்றம்

செய்திட ரூ.59.40 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை TNUIFSL மூலம் தயார் செய்யப்பட்டு நிதி வேண்டி அரசின் நிர்வாக அனுமதியை பெறும் தருவாயில் உள்ளது.

7. பாதாள சாக்கடைதிட்டம்

விரைவான நகரமயமாக்கலின் முக்கிய கோரிக்கை பாதாள சாக்கடை திட்டம் அதனை நிறைவேற்றுவதன் பொருட்டு, நம் நாகர்கோவில் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முதற்கட்டமாக Phase 1–ல் ரூ.129.00 கோடி மதிப்பீட்டில் நகரின் மையப்பகுதியில் மட்டும் மேற்கொள்ளப்பட்டு 100% பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இத் திட்டப்பணியில் 40% மாநகரப்பகுதிகள் பயன்பெறும்.

இரண்டாவது கட்டமாக Phase-II உத்தேச திட்டப்பணியில் ஆளூர், தெங்கம்புதூர் மற்றும் விடுப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணி மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டு, அதற்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) TNUIFSL மூலம் தயார் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இதற்காக தோராயமாக ரூ.726.00 கோடியில் திட்ட பிரேரணை தயார் செய்யப்பட்டு இவ்வாண்டிலேயே பணிகள் துவங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பணிகள் பயன்பாட்டுக்கு வரும் பட்சத்தில் மாநகராட்சியின் பொது சுகாதாரம் மற்றும் மாநகரின் அனைத்து வீடுகளுக்கும் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கி பொது சுகாதாரம் பேணப்பட்டு சுற்றுச்சூழல் மேம்படும்.

**நமது புவியை அடுத்த தலைமுறைகள் வாழ ஒரு பாதுகாப்பான ஆரோக்கியமான இடமாக மாற்ற நமது சூழ்நிலை பாதுகாப்போம்.**

8. பூங்கா மேம்பாடு பணிகள்

பூங்காக்களை மேம்படுத்துதல் நகரின் உள்கட்டமைப்பில் முக்கிய கட்டமாகும். நாகர்கோவில் மாநகரின் மையப்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான சர்.சி.பி.இராமசாமி பூங்கா அமைந்துள்ளது. அதனை அழகுபடுத்தும் வகையில் பல்வேறு மேம்பாட்டு பணிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பூங்காவில் அறிவியல் பூங்கா அமைத்திட ரூ.3.49 கோடி மூலதன மானிய குறைவு நிதி (CGF Deficit Fund) ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளது.

நம் நகரை பசுமையாக்கும் வகையில் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் தனியார் பங்களிப்பு மூலமாக மியாவாக்கி – அடற்காடுகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக மாநகர பகுதிகளில் பசுமையாக்கம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் சுற்றுசூழல் மேம்படுத்தப்படும்.

## 9. இதர உள் கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள்.

(i) பிரதான மந்திரி ஜான்விகாஸ் காரியக்கரன் (PMJVK) (2020–2021) ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு சமுதாய கட்டிடம் கட்டுமானப்பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

(ii) தேசிய நகர்புற சுகாதார குழுமம் (NUHM) (2022–2023) –ல் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் வடிவீஸ்வரம் மற்றும் பெருவிளை பகுதிகளில் அரசு ஆரம்ப நகர்புறசுகாதார நிலைய கட்டுமான பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

## 10. திடக்கழிவு மேலாண்மை

**வேண்டும் வேண்டும் நெகிழி இல்லா பூமி வேண்டும்.**

**இந்த பூமி நமக்கானது மட்டுமல்ல அனைத்து உயிர்களுக்குமானது.**

மாநகராட்சி 52 வார்டுகளிலும் தூய்மை பணியாளர்கள் மற்றும் தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் மூலமாகவும் வீடு வீடாக சென்று நெகிழி கழிவுகளை பயன்படுத்துவதை தவிர்க்கவும் குப்பைகளை தரம் பிரித்து வழங்குவது குறித்தும் விழிப்புணர்வு பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

### 10(i)பயோ மைனிங் Bio Mining

மாநகராட்சி பகுதிகளில் ஏற்கனவே சேகரமாகியுள்ள குப்பைகளை விஞ்ஞான ரீதியில் பகுப்பாய்வு செய்ய ரூ10.07 கோடி மதிப்பீட்டில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் **Bio Mining** பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாண்டிற்குள் இத் திட்டப்பணிகளை முழுமையாக முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 10 (ii) நுண்ணுயிர் செயலாக்க மையம்

நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகள், வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை நாகர்கோவில் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் அமைக்கப்பட்ட 11 எண்கள் நுண்ணுயிர் உரமாக்கல் மையங்கள் மூலம் இயற்கை உரம் தயார் செய்யப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு மலிவான விலையில் ஒரு கிலோ உரம் ஒரு ரூபாய் வீதம் இது வரை ரூ.28,41,810/- விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேற்படி உரம் விற்றதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் தூய்மை பணியாளர்களுக்கு பிரித்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் உரமாக்கல் மையம் இல்லாத பகுதிகளிலும் மக்கும் குப்பைகளை உரமாக்க செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாநகரில் சுகாதாரம் பேணிக்காத்து சுற்றுச்சூழல் மேம்படுத்தப்படும்.

## 10 (iii) இயற்கை எரிவாயு உற்பத்தி

மாநகரில் மரபு சாரா எரிசக்தி துறையின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி சேகரமாகும் மக்கும் கழிவுகளிலிருந்து இயற்கை எரிவாயு (BIO CNG) உற்பத்தி செய்ய ரூ.15.13 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, DBOT முறையில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## 10 (iv) பைப் கம்போஸ்டிங் (Pipe Composting):

நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் இதுவரை 300-க்கும் மேற்பட்ட வீடுகளில் Pipe Composting மூலம் மக்கும் கழிவுகள் உரமாக்கும் செயல்முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதைப் போன்று மாநகராட்சியின் மற்ற குடியிருப்பு பகுதிகளிலும் மானிய விலையில் பைப்புகள் வழங்கி இத்திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 10 (v) ஹோம் கம்போஸ்டிங் (Home Composting):

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அவர்களது சொந்த செலவிலேயே வீட்டு வளாகத்திற்குள்ளேயே ஹோம் கம்போஸ்டிங் முறையில் உரம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இதுவரையிலும் 500–க்கும் மேற்பட்ட வீடுகளில் ஹோம் கம்போஸ்டிங் முறையில் உரம் தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பிற வார்டுகளிலும் ஹோம் கம்போஸ்டிங் முறையில் உரம் தயாரிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

## 11. பொதுமக்களின் வாழ்வாதாரம் மற்றும் மக்களின் சுகாதாரம்

### சுகாதார மேம்பாடு சமூக மேம்பாட்டுக்கான வழி

மாநகரில் சுகாதார பிரிவில் ஏற்கனவே உள்ள 5 ஆரம்ப சுகாதார மையங்கள் உள்ளன. இவற்றில் மகப்பேறு சிகிட்சை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது புதிதாக 10 எண்ணம் நகர்புற நலவாழ்வு மையங்கள் ரூ.2.72 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதில் 5 நலவாழ்வு மையங்கள் திறக்கப்பட்டு பொதுமக்களுக்கு அதன்மூலம் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 1.20 கோடி செலவில் 4 நகர்புற துணை சுகாதார நிலையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது கட்டுமான பணிகள் முடிவு பெற்று பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணன்கோவில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கும், தொல்லவிளை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கும் CGF மூலதன மானியநிதியின் மூலம் ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தொல்லவிளை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிகள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரப்பெற்றுள்ளது. கிருஷ்ணன்கோவில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் தேசிய சுகாதார குழுமத்தின் (NHM) திட்டத்தின் மூலம் இம்மாநகராட்சிக்குட்பட்ட பெருவிளை (கிறிஸ்டோபர் காலனி) பகுதியில் ஒரு அரசு நகர்புற சுகாதார நிரையம் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசாணை பெறப்பட்டதை தொடர்ந்து மேற்படி கட்டிடம் இவ்வாண்டில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் கொண்டுவரப்படும்.

## 11(i) மக்களைத்தேடி மருத்துவம்

**தமிழக முதல்வர்** அவர்களால் உருவாக்கப்பட்ட இந்திய மருத்துவதுறையின் முன்னோடித்திட்டமான **மக்களை தேடி மருத்துவ திட்டம்** நவம்பர் 24 ம் தேதி 2021–ல் நாகர்கோவில் மாநகராட்சியில் துவங்கப்பட்டது.

நாகர்கோவில் மாநகராட்சியில் 5 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 28 சுகாதார பகுதிகளை உள்ளடக்கி, ஒவ்வொரு பகுதியின் கீழும் ஒரு பெண் சுகாதார தன்னார்வலர் (WHV) என்ற வீதம் மொத்தம் 28 நபர்கள் நியமிக்கப்பட்டு, 52 வார்டு பகுதிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

மேலும் இத்திட்டத்தில் ஒரு வாகனமும், இயன்மருத்துவர் (Physiotherapist), ஆதரவுசெவிலியர் (Palliative Staff Nurse) ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 28 பெண் சுகாதார தன்னார்வலர்கள் மூலம் 1,90,272 பேர் நீரழிவு மற்றும் இரத்த அழுத்தத்திற்கான பரிசோதனை செய்யப்பட்டு இரத்த அழுத்தம் பாதிக்கப்பட்டோர் 32,222 பேரும், நீரிழிவு நோய் பாதிக்கப்பட்டோர் 18739 பேரும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுகின்றனர்.

## 12. திடக்கழிவு மேலாண்மை பணிகள்

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட 52 வார்டு பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை வெளிக்கொணர்வு முகமை (Outsourcing) மூலம் பணிகள் செய்ய 611 ஒப்பந்த தூய்மை பணியாளர்களும் 143 LCV வாகனங்களும் மற்றும் 163 Pushcart–களும் பயன்படுத்தப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 13. தெருநாய்கள் கட்டுப்படுத்துதல்

தெருநாய் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் பொருட்டு நீதிமன்ற வழிகாட்டுதலின்படி தெருநாய்களின் எண்ணிக்கையை குறைக்க மாதம் தோறும் 50 முதல் 60 நாய்கள் பிடித்து ஜீவ காருண்யா விலங்குகள் நல சாரிட்டபுள் டிரஸ்ட் மூலம் கருத்தடை செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் இப்பணியினை தீவிரப்படுத்தும் நோக்கில் தெங்கம்புதூர் பகுதியில் மாநகராட்சி சார்பில் ABC Centre கட்டப்பட்டு மாதந்தோறும் 200 முதல் 250 தெருநாய்கள் பிடித்து கருத்தடை செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

## 14. மக்களுடன் மேயர்

நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 52 வார்டுகளுக்கும் மேயர் நேரடியாக சென்று மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து, அக்கோரிக்கைகள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாநகர மக்களின் புகார்களையும், கோரிக்கைகளையும் வணக்கத்திற்குரிய மேயர் தினசரி நேரடியாக முகாம் அலுவலகத்தில் பெற்று வருகிறார். மேலும் ஒவ்வொரு வியாழக்கிழமை தோறும் முற்பகல் 10 முதல் 12 மணி வரை வணக்கத்திற்குரிய மேயர், ஆணையர் அவர்கள் தலைமையில் மாநகராட்சி அலுவலர்களுடன் நாகர்கோவில் மாநகராட்சியில் மனுநீதி முகாம் நடைபெற்று வருகிறது. இம்மனுநீதி முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 16. வெளிப்படை நிர்வாகம்

நாகர்கோவில் மாநகராட்சியின் நிர்வாக செயல்பாட்டினை பொதுமக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் மாநகராட்சியின் இணையதளம் பக்கம் www.nagercoilcorporation.in செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் மாநகராட்சியில் நடைபெறும் பணிகளுக்கான டெண்டர், குத்தகை விபரங்கள், காலியாக உள்ள கடைகளின் விபரங்கள் தெரிந்து கொள்ளலாம். Bharath Bill Payment System (BBPS) வாயிலாக Google Pay, Phone Pay, Paytm போன்ற அனைத்து UPI செயலி மூலம் மற்றும் இணையதளம் வாயிலாக மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரியினை எளிதாக செலுத்திக் கொள்ளலாம்.

மேலும் பொதுமக்கள் தங்களின் புகார்களையும், கோரிக்கைகளையும் **Whatsapp (9487038984 )** மூலமாகவும் தெரியப்படுத்தலாம்.

# Budget 2025-2026

## Revenue Fund - Income

| Sl. No | Description of items | Amount (Rs) |
|---|---|---|
| 1 | Tax Revenue | 277229186 |
| 2 | Assigned Revenue and Compensations | 69241070 |
| 3 | Rental Income From Municipal Properties | 80164895 |
| 4 | Fees and User Charges | 125965061 |
| 5 | Sale and Hire Charges | 4200240 |
| 6 | Revenue Grants Contributions and Subsidies | 1417700000 |
| 7 | Income From Investments | 11175000 |
| 8 | Interests Earned | 2010000 |
| 9 | Other Income | 500000 |
| | **Total** | **1988185452** |

| Revenue Fund - Expenditure | | |
|---|---|---|
| **Sl.No** | **Description of items** | **Amount (Rs)** |
| 1 | Establishment Expenses | 434169332 |
| 2 | Administrative Expenses | 73785763 |
| 3 | Operations and Maintenance | 438622949 |
| 4 | Interest and Finance Charges, Loan Repayment | 29742375 |
| 5 | Grants, Contributions and Subsidies | 15200000 |
| 7 | Scheme Grant Expenditure | 937700000 |
| 8 | General Fund Works Expenditure | 100000000 |
| **Total** | | **2029220419** |
| **Deficit (-)** | | **41034967** |

**Nagercoil Corporation**
**Income Statement**
**Revenue Fund**

Rs

| A/C Code | A/C Head | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| **1.Tax Revenue** | | | | | |
| 1100101 | PROPERTY TAX - RESIDENTIAL (சொத்துவரி – குடியிருப்பு) | 76682944 | 84060316 | 70203124 | 100872379 |
| 1100103 | PROPERTY TAX - INDUSTRIAL (சொத்துவரி – தொழிற்சாலை) | 93644129 | 1664586 | 1211377 | 1997503 |
| 1100102 | PROPERTY TAX - COMMERCIAL (சொத்துவரி – வணிகம்) | 1484343 | 99719682 | 80978540 | 119663618 |
| 1100104 | PROPERTY TAX - VACANT SITES (சொத்துவரி – காலிமனை வரி) | 6430227 | 4748538 | 3035294 | 5698246 |
| 1101001 | PROFESSIONAL TAX (தொழில் வரி) | 46834277 | 40831200 | 23220000 | 48997440 |
| | **Total** | **225075920** | **231024322** | **178648335** | **277229186** |
| **2. Assigned Revenues and Compensations** | | | | | |
| 1201001 | DUTY ON TRANSFER OF PROPERTY (சொத்து பதிவு செய்வதில் வரப்பெறும் முத்திரை கட்டணம்) | 42538900 | 54443558 | 52806604 | 65332270 |
| 1201002 | ENTERTAINMENT TAX (கேளிக்கை வரி) | 4098852 | 3257333 | 2609237 | 3908800 |
| | **Total** | **46637752** | **57700891** | **55415841** | **69241070** |
| **3. Rental Income From Municipal Properties** | | | | | |
| 1301001 | RENT FROM SHOPPING COMPLEX/MARKETS (கடைகளுக்கான வாடகை கட்டணம்) | 64223499 | 38198487 | 55382667 | 45838184 |
| 1301002 | RENT FROM COMMUNITY HALL (சமுதய நலக்கூடம் வாடகை கட்டணம்) | 0 | 546000 | 540000 | 655200 |
| 1301003 | MARKET FEES - DAILY MARKET (சந்தை கட்டணம் – தினசரி சந்தை) | 6449184 | 4759193 | 1393356 | 5711032 |
| 1301004 | MARKET FEES - WEEKLY MARKET (வார சந்தை) | 183750 | 202584 | 215000 | 243101 |
| 1301006 | FEES FOR BAYS IN BUS STAND (பேருந்து நுழைவு கட்டணம்) | 3035004 | 3610250 | 4970000 | 4332300 |

| A/C Code | A/C Head | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| 1401202 | FEES UNDER PLACES OF PUBLIC RESORTS ACT (பொது கேளிக்கை உரிம கட்டணம்) | 0 | 0 | 0 | 0 |
| 1401301 | COPY APPLICATION FEES (விண்ணப்பத்தின் பெயரில் வழங்கப்படும் நகல் கட்டணம்) | 219225 | 181700 | 149686 | 218040 |
| 1401302 | BIRTH & DEATH CERTIFICATE FEES (பிறப்பு மற்றும் இறப்பு சான்று மூலம் வருமானம்) | 612000 | 161000 | 85400 | 193200 |
| 1401403 | OTHER DEVELOPMENT CHARGES (இதர வளர்ச்சிக் கட்டணங்கள்) | 834155 | 706765 | 712564 | 848118 |
| 1401404 | LAYOUT SUBDIVISION FEE (மனைபிரிவிற்கான துணைப்பிரிவு கட்டணம்) | 38720 | 25449 | 8900 | 30539 |
| 1401405 | UNAPPROVED LAYOUT - DEVELOPEMENT CHARGES (அங்கீகரிக்கப்படாத மனைபிரிவிற்கான வளர்ச்சி கட்டணம்) | 6788775 | 19992468 | 22887225 | 23990962 |
| 1401406 | CENTAGE CHARGES (சென்டேஜ் கட்டணங்கள்) | 157800 | 135585 | 81900 | 162702 |
| 1401501 | ENCROACHMENT FEES (ஆக்கிரமிப்பு கட்டணம்) | 1500 | 0 | 0 | 0 |
| 1401502 | DEMOLISION CHARGES (இடிபாடுகளுக்கான கட்டணங்கள்) | 181045 | 154111 | 117176 | 184933 |
| 1402001 | PENALTY & BANK CHARGES FOR DISHONOURED CHEQUES (மதிப்பிழந்த காசோலைகளுக்கு அபராதம் & வங்கிக் கட்டணம்) | 6750 | 18112 | 13500 | 21734 |
| 1402004 | OTHER PENALTIES (இதர அபராதம்) | 2712335 | 5918093 | 24459942 | 7101712 |

| A/C Code | A/C Head | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| 1404001 | ADVERTISEMENT FEES (விளம்பரக் கட்டணம்) | 452000 | 223560 | 558968 | 268272 |
| 1404002 | SURVEY FEES (கணக்கெடுப்பு கட்டணம்) | 71900 | 62100 | 34800 | 74520 |
| 1404004 | CONTRACTORS/SUPPLIERS/LICENSED SURVEYORS/PLUMBERS/ OTHERS- RENEWAL FEES (ஒப்பந்தக்காரர்கள் / வினியோகதாரர்கள் / சர்வேயர் மூலம் புதுப்பித்தல் வருமானம்) | 16415 | 19700 | 15800 | 23640 |
| 1405008 | GARBAGE/DEBRIS COLLECTION (குப்பைகள் சேகரம் மூலம் வருமானம்) | 18300 | 120635 | 196700 | 144762 |
| 1405009 | OTHER USER CHARGES (இதர உபயோகிப்பாளர் கட்டணம்) | 30000 | 3100 | 160000 | 3720 |
| 1405010 | SWM - USER CHARGES (திடக்கழிவு மேலாண்மை – உபயோகிப்பாளர் கட்டணம்) | 20221140 | 25896411 | 17235000 | 31075693 |
| 1406001 | GARDEN / PARKS RECEIPTS (தோட்டங்கள் (ம) பூங்காக்கள் வரவுகள்) | 2661421 | 2366498 | 1655565 | 2839798 |
| 1406004 | LIBRARY RECEIPTS (10% COLLECTION OF LIBRARY CESS) (நூலக வரி கட்டணம்) | 0 | 0 | 0 | 0 |
| 1407001 | ROAD CUTTING RESTORATION CHARGE (சாலைகள் தோண்டப்படுவதற்கான கட்டணம்) | 17831553 | 7400772 | 5752576 | 8880926 |
| 1408003 | MISC. RCOVERIES | 2028425 | 972937 | 2098415 | 1167524 |
| **Total** | | **66647980** | **75300288** | **113689830** | **125965061** |
| **5. Sale and Hire Charges** | | | | | |
| 1501002 | SALE OF COMPOST/MANURE/ GRASS (உரம் விற்பனை மூலம் வரவு) | 0 | 0 | 400 | 0 |
| 1501003 | AMMA UNAVAGAM- SALE OF FOOD (அம்மா உணவகம் – உணவு விற்பனை மூலம் வருமானம்) | 2625776 | 2635200 | 2210400 | 3162240 |

| A/C Code | A/C Head | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| 1501202 | SALE OF SCRAP (இரும்பு (ம) பொருட்கள் விற்பனை) | 877600 | 865000 | 1205000 | 1038000 |
| **Total** | | **3503376** | **3500200** | **3415800** | **4200240** |
| **6.Revenue Grants Contributions and Subsidies** | | | | | |
| 1601002 | GRANT FOR NATURAL CALAMITIES (இயற்கை பேரிடர்களுக்கான மானியம்) | 0 | 10000000 | 0 | 0 |
| 1601003 | GRANTS FROM STATE GOVERNMENT (மாநில அரசின் மானியங்கள்) | 11610833 | 238800000 | 91684491 | 832700000 |
| 1601006 | MLA FUND (சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்) | 0 | 10000000 | 25360000 | 20000000 |
| 1601004 | DEVOLUTION FUND (INCLUDING STATE FINANCE COMMISSION FUND) (மாநில நிதி பகிர்வு மானியம்) | 313275515 | 400000000 | 309563500 | 480000000 |
| 1603001 | SCHEME GRANTS (14TH FIN & OTHERS) திட்ட மானியங்கள் (14வது நிதி குழு மற்றும் பிற) | 19204702 | 197000000 | 202193095 | 80000000 |
| 1610005 | MP FUND (பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம்) | 0 | 3000000 | 4900000 | 5000000 |
| **Total** | | **344091050** | **607000000** | **633701086** | **1417700000** |
| **7.Income From Investments** | | | | | |
| 1701001 | INTEREST ON INVESTMENTS / FIXED DEPOSITS (முதலீடுகள் பேரில் வரப்பெறும் வட்டி வரவினம்) | 12408585 | 14900000 | 22371819 | 11175000 |
| **Total** | | **12408585** | **14900000** | **22371819** | **11175000** |
| **8. Interests Earned** | | | | | |
| 1711001 | INTEREST FROM BANK (வங்கி மூலம் வட்டி வரவினம்) | 12696649 | 4000000 | 705837 | 2000000 |
| 1712001 | INTEREST ON STAFF ADVANCES (பணியாளர்களின் முன்பணம் மூலம் பெறப்படும் வட்டி) | 0 | 10000 | 0 | 10000 |
| **Total** | | **12696649** | **4010000** | **705837** | **2010000** |

| A/C Code | A/C Head | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| **9. Other Income** | | | | | |
| 1801101 | LAPSED DEPOSIT (காலம் கடந்த வைப்பு தொகை மூலம் வரவு) | 0 | 0 | 0 | 0 |
| 1808001 | OTHER INCOME (இதர வரவினங்கள்) | 7061280 | 3000000 | 2239103 | 500000 |
| **Total** | | **7061280** | **3000000** | **2239103** | **500000** |
| **10. Loan** | | | | | |
| 3303002 | LOAN FROM TUFIDCO | 0 | 163100000 | 146400000 | 0 |
| 3303005 | LOAN FROM TNUDF | 0 | 0 | 0 | 0 |
| **Total** | | **0** | **163100000** | **146400000** | **0** |
| **Grand Total Receipt** | | **814251474** | **1226339779** | **1239131386** | **1988185452** |

# Nagercoil Corporation

Revenue Fund Expenditure

Rs

| Code No | Description of items | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| **1. Establishment Expenses** | | | | | |
| 2101001 | PAY (ஊதியம்) | 148218570 | 134458584 | 106053024 | 137868931 |
| 2101002 | GRADE PAY (தர ஊதியம்) | 16000 | 103 | 0 | 0 |
| 2101004 | DEARNESS ALLOWANCE (அகவிலைப்படி) | 50292054 | 60113837 | 55451762 | 72087291 |
| 2101005 | HOUSE RENT ALLOWANCE (வீட்டு வாடகை படி) | 7165773 | 6594807 | 5217199 | 6782359 |
| 2101006 | CITY COMP. ALLOWANCE (நகர ஈட்டுப்படி) | 2165 | 460 | 16519 | 21475 |
| 2101007 | MEDICAL ALLOWANCE (மருத்துவப்படி) | 1220733 | 1141081 | 898366 | 1167876 |
| 2101008 | OTHER ALLOWANCE (இதரப்படிகள்) | 353262 | 403850 | 350302 | 455393 |
| 2101010 | WAGES - OTHERS (கூலி) | 53783696 | 69262973 | 55078673 | 71602275 |
| 2101011 | BONUS (மிகை ஊதியம்) | 957000 | 1087541 | 886000 | 1151800 |
| 2102004 | SUPPLY OF UNIFORMS (சீருடை செலவினம்) | 0 | 387522 | 596569 | 775540 |
| 2102006 | TRAINING PROGRAMME EXPENSES (பயிற்சி செவினம்) | 6000 | 0 | 40000 | 52000 |
| 2102007 | STAFF WELFARE EXPENSES (பணியாளர் நல செலவினம்) | 635034 | 605975 | 532419 | 692145 |
| 2102008 | OTHER MISCELLANEOUS BENEFITS (மற்ற இதர பலன்கள்) | 0 | 1329 | 0 | 0 |
| 2102010 | HEALTH INSURANCE LOCAL BODY CONTRIBUTION (மருத்துவ காப்பீடு) | 123152 | 0 | 0 | 1021680 |
| 2102013 | SPECIAL PROVIDENT FUND CUM GRATUITY SCHEME (சிறப்பு சேமநல நிதி) | 310000 | 322000 | 140400 | 1802520 |

| Code No | Description of items | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| 2102014 | GROUP INSURANCE SCHEME - MANAGEMENT CONTRIBUTION (நிர்வாக பங்கு தொகை) | 0 | 0 | 0 | 383460 |
| 2102015 | CPS MANAGEMENT CONTRIBUTION (பங்களிப்பு ஓய்வு ஊதியம்) | 6582184 | 10345426 | 9086900 | 11812970 |
| 2102019 | CONVEYANCE ALLOWANCE (போக்குவரத்து படிகள்) | 854195 | 840722 | 764215 | 993480 |
| 2102020 | WASHING ALLOWANCE (சலவைபடி) | 593843 | 549960 | 433098 | 563027 |
| 2102023 | UNIFORM STITCHING CHARGES FOR WORKERS (சீரான தையல் கட்டணம்) | 119680 | 114540 | 173600 | 225680 |
| 2103001 | PENSION CONTRIBUTION (SFC) (ஓய்வூதியம்) | 123160742 | 148835835 | 95670898 | 124372167 |
| 2104001 | LEAVE ENCASHMENT (ஈட்டிய விடுப்பு ஊதியம்) | 0 | 0 | 0 | 0 |
| 2104002 | DEATH CUM RETIREMENT GRATUITY | 0 | 0 | 259433 | 337263 |
| **Total** | | **394394083** | **435066545** | **331649377** | **434169332** |
| **2. Administrative Expenses** | | | | | |
| 2201004 | MOTOR VEHICLE TAX (வாகன வரி) | 182476 | 106887 | 0 | 595000 |
| 2201101 | ELECTRICITY CONSUMPTION CHARGES FOR OFFICE BUILDINGS (மின் கட்டணங்கள்) | 0 | 0 | 30000000 | 39000000 |
| 2201105 | COMPUTER OPERATONAL EXPENSES (கணினி செலவுகள்) | 826188 | 780071 | 1482283 | 1926968 |
| 2201201 | TELEPHONE CHARGES (தொலைபேசி கட்டணம்) | 968907 | 1339158 | 1569375 | 2040188 |

| Code No | Description of items | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| 2201203 | POSTAGE AND FAX CHARGES (தபால் மற்றும் தந்தி மற்றும் தொலைநகல் கட்டணங்கள்) | 40000 | 86250 | 554559 | 720927 |
| 2202001 | BOOKS AND PERIODICALS AND MAGAZINES (புத்தகம் மற்றும் மாத வார இதழ்களுக்கான செலவு) | 85520 | 65562 | 1034149 | 1344394 |
| 2202101 | STATIONERY AND PRINTING (எழுது பொருள் மற்றும் படிவங்கள் அச்சடித்தல் செலவினம்) | 2926918 | 6148626 | 2685289 | 3490876 |
| 2203001 | TRAVEL EXPENSES (பயண செலவுகள்) | 617900 | 1056178 | 330727 | 429945 |
| 2203004 | TRAVEL EXPENSES - MUNICIPAL COUNCIL (பயணச் செலவுகள் மாமன்ற தலைவர் உறுப்பினர்கள்) | 0 | 0 | 0 | 100000 |
| 2204001 | VEHICLE INSURANCE (வாகன காப்பீடு செலவினம்) | 936891 | 849300 | 120275 | 156358 |
| 2205001 | STATUTORY AUDIT FEES (தணிக்க கட்டணம்) | 1473310 | 0 | 0 | 3200000 |
| 2205102 | COURT FEES (நீதி மன்ற கட்டணம்) | 0 | 0 | 60000 | 78000 |
| 2205104 | LEGAL & ARBITRATION EXPENSES (வழக்கு செலவினங்கள்) | 690900 | 894240 | 701800 | 912340 |
| 2205202 | ENGINEERING CONSULTANCY (பொறியாளர் ஆலோசனை) | 320000 | 414000 | 350000 | 455000 |
| 2205203 | OTHER PROFESSIONAL CHARGES (இதர தொழில்வரி கட்டணம்) | 332095 | 114023 | 248000 | 322400 |

| Code No | Description of items | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| 2206001 | ADVERTISEMENT CHARGES (விளம்பர செலவினம்) | 1812301 | 2982341 | 2762721 | 3591537 |
| 2206102 | ALL INDIA COUNCIL OF MAYORS (அனைத்து இந்தியா கூட்டம் மேயர்) | 0 | 0 | 0 | 100000 |
| 2206104 | HONORARIUM TO COUNCILLORS (மேயர்/ துணை மேயர் / மாமன்ற உறுப்பினர்கள் மதிப்பூதியம்) | 0 | 5014000 | 5995000 | 6540000 |
| 2208001 | CASH AWARDS AND PRIZES (பணம் விருதுகள் மற்றும் பரிசுகள்) | 8000 | 25300 | 4000 | 5200 |
| 2208003 | OTHER EXPENESE (இதர செலவினம்) | 14282740 | 13881012 | 6751254 | 8776630 |
| 2208004 | SITTING FEES - COUNCILLORS (மேயர் / துணை மேயர் / மாமன்ற உறுப்பினர்கள் அமர்வு படி) | 480000 | 0 | 0 | 0 |
| **Total** | | **25984146** | **33756948** | **54649432** | **73785763** |
| **3. Operations and Maintenance** | | | | | |
| 2301002 | POWER CHARGES FOR WATER HEAD WORKS / PUMPING STATIONS / BOOSTER STATIONS (நீர் ஏற்றுதல் நிலையங்களுக்கான மின் கட்டணம்) | 0 | 6704130 | 20000000 | 26000000 |
| 2301003 | POWER CHARGES FOR STREET LIGHTS (தெருவிளக்குகளுக்கான மின் கட்டணம்) | 26759926 | 68750807 | 78644207 | 102237469 |
| 2303001 | PETROL (எரி பொருள் செலவினம்) | 498150 | 1382450 | 196479 | 255423 |
| 2303002 | DIESEL (எரி பொருள் செலவினம்) | 7914184 | 8994899 | 4865627 | 6325315 |

| Code No | Description of items | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| 2303003 | OIL AND LUBRICANTS (எரி பொருள் செலவினம்) | 82979 | 264794 | 103619 | 134705 |
| 2303004 | MEDICINES AND HOSPITAL NEEDS (மருந்துகள் மற்றும் மருத்துவமனை தேவைகள்) | 0 | 0 | 14808 | 19250 |
| 2303005 | SANITARY MATERIALS (பொது சுகாதார தளவாட செலவினம்) | 2081477 | 5487963 | 3966667 | 5156667 |
| 2304002 | HIRE CHARGES FOR MACHINERIES/ EQUIPMENTS (தளவாடங்கள் வாடகை) | 327096 | 0 | 0 | 0 |
| 2304003 | HIRE CHARGES FOR VEHICLES (வாகனங்களுக்கான வாடகை) | 44742005 | 28249810 | 4512910 | 5866783 |
| 2305001 | REPAIRS AND MAINTENANCE - ROAD & PAVEMENTS - CONCRETE (சாலைகளுக்கான பராமரிப்பு செலவினம்) | 0 | 0 | 0 | 0 |
| 2305002 | REPAIR & MAINTENANCE - ROAD AND PAVEMENTS - BLACK TOPPING (நடைபாதை பராமரிப்பு செலவினம்) | 1542820 | 0 | 0 | 0 |
| 2305007 | MAINTENANCE EXPENSES FOR STREET LIGHTS (தெருவிளக்கு பராமரிப்பு செலவினம்) | 14772781 | 17956491 | 11847019 | 47500000 |
| 2305008 | IMPROVEMENT TO COMPOST YARD (உரங்கிடங்கு மேம்பாடுத்துதல்) | 4086952 | 0 | 0 | 0 |

| Code No | Description of items | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| 2305101 | MAINTENANCE OF GARDENS / PARKS / SWIMMING POOLS (பூங்கா பராமரிப்பு செலவினம்) | 5241733 | 0 | 0 | 0 |
| 2305202 | REPAIRS AND MAINTENANCE - BUILDINGS (கட்டிடங்களுக்கான பராமரிப்பு செலவினம்) | 4663724 | 0 | 130662 | 0 |
| 2305301 | LIGHT VEHICLES - MAINTENANCE (இலகுரக வாகனம் பராமரிப்பு செலவினம்) | 2865586 | 3607054 | 1284564 | 1413022 |
| 2305302 | HEAVY VEHICLES - MAINTENANCE (கனரக வாகனம் பராமரிப்பு செலவினம்) | 2415548 | 311113 | 1050607 | 1155668 |
| 2305303 | OTHER VEHICLES - MAINTENANCE (இதர வாகனம் பராமரிப்பு செலவினம்) | 0 | 12902 | 500000 | 550000 |
| 2305902 | REPAIRS AND MAINTENANCE - INSTRUMENTS, PLANT & MACHINERY (அலுவலக தளவாட சாமான்கள் பராமரிப்பு செலவினம்) | 0 | 21146 | 0 | 0 |
| 2308003 | REMOVAL OF DEBRIS (குப்பைகளை அகற்றுவதற்கான செலவினம்) | 0 | 11494067 | 0 | 0 |
| 2308004 | FAIRS & FESTIVALS (கண்காட்சிகள் மற்றும் திருவிழாக்களுக்கான செலவினம்) | 0 | 167440 | 0 | 200000 |
| 2308009 | GARBAGE CLEARANCE (குப்பை அகற்றுதலுக்கான செலவினம்) | 134314688 | 114228543 | 242898974 | 214207687 |

| Code No | Description of items | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| 2308013 | ANIMAL BIRTH CONTROL (விலங்கு பிறப்பு கட்டுப்பாடுக்கான செலவினம்) | 456400 | 1466864 | 3009600 | 3310560 |
| 2308019 | AMMA UNAVAGAM (அம்மா உணவகம்) | 7500983 | 7726084 | 5719677 | 10800000 |
| 2308025 | OPERATING EXPENSES-COMMON KITCHEN (காலை உணவு திட்டம்) | 1113541 | 11873406 | 8492214 | 13490400 |
| | **Total** | **261380573** | **288699963** | **387237634** | **438622949** |
| **4. Interest and Finance Charges, Loan Repayment** | | | | | |
| 2403001 | INTEREST ON LOANS FROM TNUFIDCO | **5503930** | 61773104 | 39281719 | 29742375 |
| 2403005 | INTEREST ON LOANS FROM TNUDF | **0** | 54168248 | 0 | 0 |
| 2407001 | Bank Charges | 20608.00 | 0 | 0 | 0 |
| | **Total** | **5524538** | **115941352** | **39281719** | **29742375** |
| **5. Programme Expenses** | | | | | |
| 2501001 | ELECTION EXPENSE | 5763759 | 0 | 536411 | 0 |
| 2504001 | CENSUS EXPENSES | 0 | 0 | 0 | 0 |
| | **Total** | **5763759** | **0** | **536411** | **0** |
| **6. Grants , Contributions and Subsidies** | | | | | |
| 2602003 | CONTRIBUTIONS PAYABLE TO LPA | 3333105 | 0 | 0 | 0 |
| 2602004 | TNIUS | 0 | 0 | 300000 | 300000 |
| 2602006 | MUNICIPAL CONTRIBUTION ON SCHEME WORKS | 0 | 0 | 0 | 14900000 |
| | **Total** | **3333105** | **0** | **300000** | **15200000** |
| **7. Scheme Grants Expenditure** | | | | | |
| 4122001 | PROJECTS-IN-PROGRESS | 0 | 458800000 | 0 | 937700000 |
| | **Total** | **0** | **458800000** | **0** | **937700000** |
| **8. General Fund Works Expenditure** | | | | | |
| 4121001 | PROJECTS-IN-PROGRESS | 0 | 60000000 | 0 | 95000000 |
| 4121001 | GENERAL FUND (CLIMATE CHANGE ACTION PLAN) | 0 | | 0 | 5000000 |
| | **Total** | **0** | **60000000** | **0** | **100000000** |
| | **Grand Total Expenditure** | **696380204** | **873464808** | **813654573** | **2029220419** |

## Scheme Grant Details

| Sl.No | Grant Details | Amount (Rs) |
|---|---|---|
| 1 | TURIP | 29700000 |
| 2 | TURIP-ROAD | 310000000 |
| 3 | BUS STAND | 300000000 |
| 4 | MLA | 20000000 |
| 5 | MP | 5000000 |
| 6 | SCIENCE PARK (STATE) | 20000000 |
| 8 | EMAT | 10000000 |
| 9 | STREET LIGHT (ADDED AREA + LEFT OUT AREA) | 50000000 |
| 12 | 6TH SFC | 123000000 |
| 13 | 15TH CFC | 70000000 |
| | **SUB TOTAL** | **937700000** |

## General Fund Works Expenditure

| Sl.No | Description of items | Amount (Rs) |
|---|---|---|
| 1 | CAPITAL WORKS - GENERAL FUND | 95000000 |
| 2 | GENERAL FUND (CLIMATE CHANGE ACTION PLAN) | 5000000 |
| | **SUB TOTAL** | **100000000** |
| | **GRAND TOTAL** | **1037700000** |

# Budget 2025-2026

## Water Supply and Drainage Fund - Income

| Sl.No | Description of items | Amount (Rs) |
|---|---|---|
| 1 | Tax Revenue | 114115872 |
| 2 | Fees and User Charges | 66360067 |
| 3 | Revenue Grants Contributions and Subsidies | 474400000 |
| 4 | Income From Investments | 10000000 |
| 5 | Interests Earned | 1000000 |
| 6 | Loan | 211800000 |
| | **Total** | **877675939** |

## Water Supply and Drainage Fund - Expenditure

| Sl.No | Description of items | Amount (Rs) |
|---|---|---|
| 1 | Establishment Expenses | 40894439 |
| 2 | Administrative Expenses | 8100319 |
| 3 | Operations and Maintenance | 90952555 |
| 4 | Interest and Finance Charges, Loan repayment | 72658748 |
| 5 | Grants, Contributions and Subsidies | 0 |
| 6 | Scheme Grant Expenditure | 686200000 |
| 7 | General Fund Works Expenditure | 60000000 |
| **Total** | | **958806061** |
| **Deficit (-)** | | **81130122** |

# Nagercoil Corporation
## Income Statement
## Water Supply and Drainage Fund

Rs

| A/C Code | A/C Head | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| **1.Tax Revenue** | | | | | |
| 1100201 | WATER SUPPLY AND DRAINAGE TAX - RESIDENTIAL (குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வரி – குடியிருப்பு) | 38341471 | 42030158 | 35101561 | 50436190 |
| 1100203 | WATER SUPPLY AND DRAINAGE TAX - INDUSTRIAL (குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வரி – தொழிற்சாலை) | 742172 | 832293 | 605688 | 998752 |
| 1100202 | WATER SUPPLY AND DRAINAGE TAX - COMMERCIAL (குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வரி – வணிகம்) | 46822065 | 49859840 | 40489270 | 59831808 |
| 1100204 | WATER SUPPLY AND DRAINAGE TAX - VACANT SITES (குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வரி – காலிமனை) | 3215113 | 2374268 | 1517647 | 2849122 |
| | **Total** | **89120821** | **95096559** | **77714166** | **114115872** |
| **2. Fees and User Charges** | | | | | |
| 1402001 | PENALTY & BANK CHARGES FOR DISHONOURED CHEQUES | 0 | 5175 | 5250 | 6210 |
| 1405004 | METERED/ TAP RATE WATER CHARGES (மீட்டர் / குழாய் குடிநீர் இணைப்புகள் மீதான கட்டணம்) | 35814482 | 41736384 | 21878159 | 50083661 |
| 1405005 | WATER CHARGES - WATER SUPPLY THROUGH LORRY (குடிநீர் கட்டணம் – லாரி மூலம் வினியோகம் செய்தல்) | 3600 | 4513 | 225 | 5416 |
| 1407001 | ROAD CUTTING RESTORATION CHARGE | 961800 | 2122255 | 1058550 | 2546706 |
| 1407002 | INITIAL AMOUNT FOR NEW WATER SUPPLY CONNECTIONS (புதிய குடிநீர் இணைப்புக்கான ஆரம்ப கட்டணம்) | 2378500 | 4932062 | 2743000 | 5918474 |
| 1407003 | INITIAL AMOUNT FOR DRAINAGE CONNECTIONS (புதிய வடிகால இணைப்புக்கான ஆரம்ப கட்டணம்) | 12493000 | 5514250 | 2545570 | 6617100 |
| 1407004 | WATER CONNECTION CHARGES | 138450 | 133227 | 81300 | 159872 |
| 1407006 | WATER SUPPLY DISCONNECITON CHARGES (குடிநீர் இணைப்பு துண்டிப்பு கட்டணம்) | 0 | 5000 | 0 | 6000 |
| 1407014 | WATER SUPPLY INSPECTION CHARGES | 407500 | 847365 | 403700 | 1016838 |
| 1407016 | WATER SUPPLY NAME TRANSFER CHARGES | 0 | 5000 | 0 | 6000 |
| 1408003 | MISC. RECOVERIES | 0 | 0 | 227977 | 0 |
| | **Total** | **52197332** | **55300056** | **28938481** | **66360067** |

| A/C Code | A/C Head | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| **3.Revenue Grants Contributions and Subsidies** | | | | | |
| 1603001 | SCHEME GRANTS | 0 | 0 | 0 | 474400000 |
| | **Total** | **0** | **0** | **0** | **474400000** |
| **4.Income From Investments** | | | | | |
| 1701001 | INTEREST ON INVESTMENTS / FIXED DEPOSITS | 16714813 | 19700000 | 20778029 | 10000000 |
| | **Total** | **16714813** | **19700000** | **20778029** | **10000000** |
| **5. Interests Earned** | | | | | |
| 1711001 | INTEREST FROM BANK | 1152891 | 800000 | 427508 | 1000000 |
| | **Total** | **1152891** | **800000** | **427508** | **1000000** |
| **6. Loan** | | | | | |
| 3303002 | LOAN FROM TUFIDCO | 0 | 0 | 0 | 93100000 |
| 3303005 | LOAN FROM TNUIFSL | 0 | 0 | 0 | 118700000 |
| | **Total** | **0** | **0** | **0** | **211800000** |
| | **Grand Total** | **159185857** | **170896615** | **127858184** | **877675939** |

## Nagercoil Corporation

## Expenditure Statement

## Water Supply and Drainage Fund

Rs

| A/C Code | A/C Head | 2022-2023 ( Audited) | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-25 02.02.2025 | Budget Estimate 2025-26 |
|---|---|---|---|---|---|
| **1. Establishment Expenses** | | | | | |
| 2101001 | PAY (ஊதியம்) | 14993189 | 15394590 | 12284326 | 15969624 |
| 2101004 | DEARNESS ALLOWANCE (அகவிலைப்படி) | 5119351 | 6841676 | 6364861 | 8274319 |
| 2101005 | HOUSE RENT ALLOWANCE (வீட்டு வாடகை படி) | 733700 | 741520 | 574800 | 747240 |
| 2101007 | MEDICAL ALLOWANCE (மருத்துவப்படி) | 105600 | 94875 | 72900 | 94770 |
| 2101008 | OTHER ALLOWANCE (இதரப்படிகள்) | 120000 | 126500 | 110000 | 143000 |
| 2101010 | WAGES - OTHERS (கூலி) | 0 | 8452344 | 11302220 | 14692886 |
| 2101011 | BONUS (மிகை ஊதியம்) | 79000 | 83950 | 67000 | 87100 |
| 2102010 | HEALTH INSURANCE LOCAL BODY CONTRIBUTION (மருத்துவ காப்பீடு) | 0 | 200000 | 0 | 87120 |
| 2102013 | SPECIAL PROVIDENT FUND CUM GRATUITY SCHEME (சிறப்பு சேமநல நிதி) | 0 | 20000 | 0 | 22000 |
| 2102014 | GROUP INSURANCE SCHEME - MANAGEMENT CONTRIBUTION (நிர்வாக பங்கு தொகை) | 0 | 100000 | 0 | 31944 |
| 2102015 | CPS MANAGEMENT CONTRIBUTION (பங்களிப்பு ஓய்வு ஊதியம்) | 671676 | 925970 | 539743 | 701666 |
| 2102019 | CONVEYANCE ALLOWANCE (போக்குவரத்து படிகள்) | 31200 | 30360 | 30700 | 39910 |
| 2102020 | WASHING ALLOWANCE | 5200 | 3220 | 2200 | 2860 |
| **Total** | | **21858916** | **33015005** | **31348750** | **40894439** |
| **2. Administrative Expenses** | | | | | |
| 2201004 | MOTOR VEHICLE TAX (வாகன வரி) | 0 | 0 | 0 | 50000 |
| 2204001 | VEHICLE INSURANCE | 0 | 0 | 56104 | 72935 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2205202 | ENGINEERING CONSULTANCY | 0 | 4660601 | 4924990 | 6402487 |
| 2206001 | ADVERTISEMENT CHARGES (விளம்பர செலவினம்) | 0 | 0 | 20832 | 27082 |
| 2208003 | OTHER EXPENESE (இதர செலவினம்) | 92919 | 40000 | 1190627 | 1547815 |
| **Total** | | **92919** | **4700601** | **6192553** | **8100319** |
| **3. Operations and Maintenance** | | | | | |
| 2301001 | POWER CHARGES FOR SEWERAGE SYSTEM/ PUMPING STATIONS | 5006626 | 0 | 0 | 0 |
| 2301002 | POWER CHARGES FOR WATER HEAD WORKS / PUMPING STATIONS / BOOSTER STATIONS (நீர் ஏற்றுதல் நிலையங்களுக்கான மின் கட்டணம்) | 36643973 | 95701691 | 67927842 | 88306195 |
| 2303002 | DIESEL (எரி பொருள் செலவினம்) | 1455751 | 1416359 | 864544 | 1123907 |
| 2303005 | SANITARY MATERIALS (பொது சுகாதார தளவாட செலவினம்) | 1064195 | 0 | 0 | 0 |
| 2305009 | MAINTENANCE EXPENSES - WATER SUPPLY (பராமரிப்பு செலவினம்) | 27499906 | 0 | 1069000 | 1389700 |
| 2305301 | LIGHT VEHICLES - MAINTENANCE (இலகுரக வாகனம் பராமரிப்பு செலவினம்) | 298050 | 291154 | 102118 | 132753 |
| 2305302 | HEAVY VEHICLES - MAINTENANCE (கனரக வாகனம் பராமரிப்பு செலவினம்) | 0 | 300000 | 0 | 0 |
| **Total** | | **71968501** | **97709204** | **69963504** | **90952555** |
| **4. Interest and Finance Charges, Loan Repayment** | | | | | |
| 2406001 | INTEREST ON LOANS/ WAYS & MEANS ADVANCE/ OVERDRAFT | 8137236 | 0 | 114297161 | 72658748 |
| 2407001 | BANK CHARGES | 1090 | 0 | 0 | 0 |
| **Total** | | **8138326** | **0** | **114297161** | **72658748** |
| **5. Grants , Contributions and Subsidies** | | | | | |
| 2602006 | MUNICIPAL CONTRIBUTION | 5052939 | 0 | 0 | 0 |
| **Total** | | **5052939** | **0** | **0** | **0** |

| 6. Scheme Grants Expenditure | | | | | |
|---|---|---|---|---|---|
| 4122001 | Projects-In-Progress | 0 | 360900000 | 0 | 474400000 |
| 4122001 | Projects-In-Progress (Loan) | 0 | 0 | 0 | 211800000 |
| **Total** | | **0** | **360900000** | **0** | **686200000** |
| **7. General Fund Works Expenditure** | | | | | |
| 4121001 | Projects-In-Progress | 0 | 50000000 | 0 | 60000000 |
| **Total** | | **0** | **50000000** | **0** | **60000000** |
| **Grand Total Expenditure** | | **107111601** | **496324810** | **221801968** | **958806061** |

## Nagercoil Corporation
## Water Supply and Drainage Fund
## Scheme Grant Details

| Sl.No | Grant Details | Amount (Rs) |
|---|---|---|
| 1 | 15 CFC (WATER SUPPLY WORK) | 30000000 |
| 2 | AMRUT 2.0 (24X7) | 444400000 |
| | **SUB TOTAL** | **474400000** |

## Loan

| Sl.No | Description of items | Amount (Rs) |
|---|---|---|
| 1 | TNUIFSL | 118700000 |
| 2 | TUFIDCO | 93100000 |
| | **SUB TOTAL** | **211800000** |

### General Fund Work Details

| Sl.No | Work Details | Amount (Rs) |
|---|---|---|
| 1 | CAPITAL WORKS - GENERAL FUND | 60000000 |
| | **SUB TOTAL** | **60000000** |
| | **GRAND TOTAL** | **746200000** |

# நாகர்கோவில் மாநகராட்சி

## உத்தேச வரவு செலவு அறிக்கை

Rs

| வரவு | Cr. |
|---|---|
| வருவாய் மற்றும் மூலதனநிதி | 198.81 |
| குடிநீர் மற்றும் வடிகால் நிதி | 87.76 |
| **மொத்தம்** | **286.57** |

| செலவு | Cr. |
|---|---|
| வருவாய் மற்றும் மூலதனநிதி | 202.92 |
| | 95.88 |
| குடிநீர் மற்றும் வடிகால் நிதி | |
| **மொத்தம்** | **298.88** |
| **பற்றாகுறைவு** | **-12.23** |

நிஷாந்த்கிருஷ்ணா,இ.ஆ.ப.,
ஆணையர்
நாகர்கோவில் மாநகராட்சி

ரெ. மகேஷ், பி.ஏ, பி.எல்.,
மாமன்ற தலைவர்
நாகர்கோவில் மாநகராட்சி